**செய்தி வெளியீடு எண்:1348** **நாள்:15.12.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

# நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு "சாலைப் பாதுகாப்புப் பொறியியல்" தொடர் சிறப்புப் பயிற்சியினை – மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பயிற்சி மையக் கூட்டரங்கில் இன்று (15.12.2021) காலை 10.30 மணியளவில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு "சாலைப் பாதுகாப்புப் பொறியியல்" தொடர் சிறப்பு பயிற்சியினை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு, தொடர் சிறப்பு பயிற்சியினை துவக்கி வைத்து உரையாற்றுகையில், சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும், சாலைகளில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தவும், சாலை தரத்தினை உறுதிப்படுத்திடவும் இவ்பயிற்சி பயனுள்ளதாக இருக்கும் என்றும், மேலும், இப்பயிற்சியில் ஒரு பேஜ்க்கு 40 நபர்கள் வீதம், 5–நாட்கள் நடைபெறும், இப்பயிற்சி இனிவரும் காலங்களில் தொடர்ந்து நடத்தப்படும் என்றும், இப்பயிற்சியினை பயன்படுத்திக் கொண்டு சிறப்புற பணியாற்ற வேண்டுமென நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இப்பயிற்சி கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

நிறுவனங்கள் தங்களை வளர்த்துக் கொள்ள தொடர்ந்து பயிற்சிகளை பணியாளர்களுக்கு வழங்கி வருகிறது. பெரிய நிறுவனங்கள் ஏராளமான நிதியைப் பயிற்சிகள் வழங்க செலவழித்து வருகின்றன.

பொறியியல் கல்வி, பாடநூல் கல்வியுடன் பயிற்சியும் சேர்ந்த கல்விதான் என்றாலும், நெடுஞ்சாலைத்துறைப் பணியில் பொறியாளர்கள் சேர்ந்தபின் துறை சார்ந்த நுணுக்கங்களைக் கற்க வேண்டும்; இந்தத்துறை வல்லுநர்கள் தாங்கள் அனுபவித்தில் கற்ற தொழில்நுட்பங்களைப் இளம் பொறியாளர்களுக்கு வழங்கிட ஏற்பாடு செய்திட வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வழங்கும் பணியினை இது வரை மேற்கொண்டிருந்தாலும் மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம், இந்திய சாலைப் பொறியாளர்கள் கல்வி நிறுவனம் (Indian Academy of Highway Engineers (IAHE)) போன்று நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கும் பயிற்சி மையம் தனியாக தொடங்கப்பட்டுள்ளது.

சாலை விபத்துகளிலும் உயிர் இழப்பிலும் தமிழகம் கடந்த 6 ஆண்டுகளாக இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது என்பது வருந்தத்தக்க செய்தியாகும்.

இந்நிலையை மாற்றி 'சாலை விபத்தில்லாத தமிழகம்' என்ற உன்னத நிலைக்கு தமிழகத்தினை உயர்த்திட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார்கள். அந்தக் குறிக்கோளினை எட்டிட அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

சாலைகளின் பணியினை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அதன் முதல் இயக்குநர் ராமசாமி ரெட்டி அவர்களின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் இப்படிச் சொல்லலாம்.

"பாதுகாப்பாகவும், வேகமாகவும், செலவின்றியும், வசதியாகவும், அனைத்துப் போக்குவரத்தும் நடைபெற உதவுவது சாலைகளின் பணி". இந்த நான்கு பணிகளில் முதன்மையானது பாதுகாப்பு என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

நெடுஞ்சாலைத்துறை, காவல் துறை, போக்குவரத்துத் துறை, கல்வித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளும் இணைந்து நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமே இது இயலும்.

மாநிலக் குற்றப்பிரிவு ஆணையத்தில் உள்ள தகவலின்படி 2020ஆம் ஆண்டு தமிழகத்தில் 45489 விபத்துகள் ஏற்பட்டு அவற்றில் 8060 பேர் உயிரிழந்துள்ளனர். விபத்துகளை அறவே இல்லாமல் செய்திட பலமுனைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் "பொறியியல் சார்ந்த நடவடிக்கை மேற்கொள்வது" முக்கியமானது என்று தமிழக அரசு கருதுகிறது.

விபத்துக்களில் உயிரிழக்கும் அல்லது கடுமையாகக் காயமுறுபவர்களில் பெரும்பாலும் இளவயதினர் தான். அவர்கள் குடும்பத்திற்கு மட்டுமல்லாது, நாட்டிற்கும் இழப்பு என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதற்காகத் தான் "இன்னுயிர் காப்போம்" போன்ற திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் உருவாக்கி உள்ளார்கள்.

நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் சாலைகளை ஆய்வு செய்கிறபொழுது "சாலை பாதுகாப்பு" கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து விபத்திற்கு வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்டறிந்து குறிப்பிட்ட பகுதிகளை தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்துவது குறித்துச் சிந்திக்க வேண்டும் என்ற அடிப்படையில் முதற்கட்டமாக 40 பொறியாளர்களுக்கு 10 தொகுதிகளாகப் பிரித்து 400 பொறியாளர்களுக்கு சாலை பாதுகாப்புப் பொறியியலில் தொடர்ந்து சிறப்பு பயிற்சி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது, அந்த சிறப்புப் பயிற்சியினை இன்று தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பயிற்சிகளைத் தேர்ந்த பயிற்சியாளர்கள், இந்தியத் தொழில்நுட்ப கழகத்தின் மூத்த பேராசிரியர், முனைவர் வீரராகவன் அவர்கள் ஒருங்கிணைப்பில் வழங்கவுள்ளார்கள்.

பயிற்சியில்

1. சாலை சந்திப்புகளைப் பாதுகாப்பாக வடிவமைப்பது,
2. போக்குவரத்தினை மேலாண்மை செய்வது,
3. போக்குவரத்து வேகத்தினைக் குறைப்பது,
4. சாலை பாதுகாப்பு தணிக்கை,
5. விபத்துப் பகுதிகளைக் கண்டறிந்து, மேம்படுத்துவது,
6. எச்சரிக்கை கருவிகளை நிறுவுவது,
7. நடைப்பயணிகள் பாதுகாப்பு

இது போன்ற கூறுகளைக் கற்றுத் தேர்வது இந்தப் பயிற்சியின் அடிப்படை நோக்கமாகும்.

அந்தக் கூறுகளையும் அருகில் உள்ள சாலைகளுக்கே சென்று பார்வையிட்டுக் களத்திலேயே கற்பது என்ற பயிற்சித் திட்டம் விரிவாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனை இளம் பொறியாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தப் பயிற்சி 5 நாள்கள் நடைபெறும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 5 நாள்களும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பொறியாளர்கள் வந்து இங்கேயே தங்கியிருந்து பயிற்சி பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விபத்து நடந்த பிறகு காப்பாற்றுவர் மருத்துவர், விபத்து நடக்காமல் தடுப்பவர்கள் பொறியாளர்களே.

<u>"விஷன் ஜீரோ" – சுவீடன்</u>

<u>விபத்தில்லா சுவீடன்</u>

சுவீடன் நாட்டில் சாலை பாதுகாப்பிற்கு "விஷன் ஜீரோ" என்ற கொள்கையினை 1997 ஆம் ஆண்டு முதல் கடைபிடித்துவருகிறார்கள்.

சாலை பாதுகாப்பு என்பது சாலையை பயன்படுத்துபவர்கள் பொறுப்பு மட்டுமல்ல. சாலையை பராமரிப்பவர்கள், வாகனங்களை உற்பத்தி செய்பவர்கள் போன்ற எல்லோருடைய பொறுப்பும் ஆகும்.

இப்பயிற்சி துவக்க விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, அரசு முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ்குமார், IAS., அவர்கள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் திரு.பா.கணேசன், IAS., அவர்கள், இந்திய தொழில்நுட்பக் கழக முனைவர். அ.வீரராகவன் அவர்கள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இயக்குநர் பொறிஞர்.ரெ.கோதண்டராமன் அவர்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் திரு.ந.பாலமுருகன் மற்றும் நெடுஞ்சாலை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர் .

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**